# MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN (AUTONOMOUS), VANIYAMBADI

## PG AND RESEARCH DEPARTMENT OF TAMIL

## II M.A., TAMIL – SEMESTER - IV

**Core Course -1: பெண் படைப்பாளர்களின் இலக்கியம்**

**Code: 23PETA43**

Unit: 4 1.ஆண்டாள் பிரியதர்ஷினி 2.அம்பை,3.சல்மா,4.திலகவதி

**Learning Objectives:** தமிழ் இலக்கிய பரப்பில் பெண் படைப்பாளர்களை அறிந்து கொள்ளுதல்.பெண்ணிலக்கிய கொள்கைகளை விளங்கிக் கொள்தல் பெண் படைப்பாளர்களின் இலக்கியங்கள் வழி வாழ்வியலை உணர்தல்.காலந்தோறும் பெண் மொழியின் உளவியலை உணர்ந்து கொள்ளுதல்.பெண் படைப்பாளர்களின் நெறிகளைவிளங்கிக்கொள்ளுதல்:

**Course Outcome:**

1.தமிழ் இலக்கிய பரப்பில் பெண் படைப்பாளர்களை அறிவர்.

2.பெண் இலக்கிய கொள்கைகளை விளங்கிக் கொள்வர்.

3.பெண் படைப்பாளர்களின் இலக்கியங்கள் வழி வாழ்வியலை அறிவர்.

4.காலம் தோறும் பெண் மொழியின் உளவியலை உணர்ந்து கொள்வர்.

5.பெண் படைப்பாளர்களின் சொல் நெறிகளை விளங்கிக் கொள்வர்

### ஆண்டாள் பிரியதர்ஷினி

ஆண்டாள் என்ற பெயரில் உள்ள மற்ற பக்கங்களைப் பார்க்க: ஆண்டாள் (பெயர் பட்டியல்) பிரியதர்ஷினி என்ற பெயரில் உள்ள மற்ற பக்கங்களைப் பார்க்க: பிரியதர்ஷினி (பெயர் பட்டியல்)

### கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி

கவிஞர், எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்ஷினி ஆண்டாள் பிரியதர்ஷினி (பிறப்பு: அக்டோபர் 5, 1962) கவிஞர். எழுத்தாளர். பேச்சாளர். மொழிபெயர்ப்பாளர். திரைப்படப் பாடலாசிரியர். திராவிட முன்னேற்றக்

கழகத்தின் செய்தி, மக்கள் தொடர்புப் பிரிவின் மாநில துணைத் தலைவர். சென்னை, கோவை, புதுவைத் தொலைக்காட்சி நிலையங்களில் நிலைய அதிகாரியாகப் பணியாற்றினார். தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.

1 பிறப்பு, கல்வி
2 தனி வாழ்க்கை
3 இலக்கிய வாழ்க்கை
4 மொழிபெயர்ப்பு
5 திரைப்படம்
6 அரசியல்
7 விருதுகள்
8 இலக்கிய இடம்
9 நூல்கள்
9.1 கவிதைத் தொகுப்பு
9.2 சிறுகதைத் தொகுப்பு
9.3 நாவல்
9.4 குறுநாவல்
9.5 கட்டுரை நூல்
9.6 மொழிபெயர்ப்பு
9.7 தொகுப்பு நூல்
9.8 ஆன்மிகம்
9.9 புதிய படைப்புகள்
10 உசாத்துணை

**பிறப்பு, கல்வி**

ஆண்டாள் பிரியதர்ஷினி, 1962-ல், திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில், புலவர் நெல்லை ஆ. கணபதி - சுப்புலட்சுமி தம்பதியினருக்குப் பிறந்தார். சென்னை சாரதா வித்யாலயாவில் பள்ளிக் கல்வி பயின்றார். எதிராஜ் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். அண்ணா பல் கலையில் எம்.பில். முடித்தார்.

**தனி வாழ்க்கை**

ஆண்டாள் பிரியதர்ஷினி, சென்னை, கோவை, புதுவை தொலைக்காட்சி நிலையங்களில் நிலைய அதிகாரியாகப் பணியாற்றினார். கணவர் பால இரமணி (அமரர்). ஒரு மகன்; ஒரு மகள்.

சிறுகதைத் தொகுப்பு வெளியீடு அப்துல் கலாமுடன் நடிகர் கமல்ஹாசனுடன் இலக்கிய வாழ்க்கை ஆண்டாள் பிரியதர்ஷினியின் தந்தை, தாய் இருவருமே எழுத்தாளர்கள், கவிஞர்கள். அவர்கள் வழியில் ஆண்டாள் பிரியதர்ஷினியும் கவிதைகள் எழுதினார். சுஜாதா இவரது கவிதைகளை கணையாழியின் கடைசி பக்கங்கள் மூலம் கவனப்படுத்தினார். “காலத்திற்கு ஏற்றாற் போல் கவிதை தன்னை மாற்றிக் கொண்டு வருகிறது. ஆண்டாள் பிரியதர்ஷினி இன்னும் பல உயரங்களைத் தொடுவார்” என்று குறிப்பிட்டுப் பாராட்டினார். முன்னணி இதழ்களில் ஆண்டாள் பிரியதர்ஷினியின் கவிதைகள் வெளியாகி வாசக கவனம் பெற்றன. தொடர்ந்து சிறுகதைகளையும், கட்டுரைகள், நாவல்களையும் எழுதினார். தினமலர், ஆனந்த விகடன், குங்குமம், கலைமகள் போன்ற இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகின. இவரது சில சிறுகதைகள் நாடகமாகவும் மேடை ஏறின. இவரது முதல் சிறுகதைத் தொகுப்பு ‘சுருதி பிசகாத வீணை’ இவர் கல்லூரி படிக்கும்போது வெளியானது. ஆண்டாள் பிரியதர்ஷினி, குறும்படங்களைத் தயாரித்தார். ‘செம்மொழி மாநாட்டுக் கவியரங்கம்' உள்பட பல கவியரங்குகளில் கலந்துகொண்டு கவிதை வாசித்தார். இவரது 'தகனம்', ‘வானவில் வாழ்க்கை’, ‘கதாநாயகி' பள்ளி மற்றும் கல்லூரிகளில் பாட நூலாக இடம் பெற்றன. பல மாணவர்கள் இவரது படைப்புகளை ஆராய்ந்து இளமுனைவர், முனைவர் பட்டம் பெற்றனர்.சாகித்ய அகாதெமி வெளியிட்டுள்ள பெண் படைப்பாளர் படைப்புகள் நூலில் இவரது சிறுகதை இடம் பெற்றது. பெண் கவிஞர்களின் தொகுப்பு நூலான ‘பறத்தல் அதன் சுதந்திரம்’ கவிதைத் தொகுப்பு நூலில் இவரது கவிதை இடம்பெற்றது.மொழிபெயர்ப்பு காந்தியடிகளின் ‘சத்திய சோதனை’ புத்தகத்தை தற்காலத்திற்கேற்றவாறு எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்துள்ளார். இது ஆண்டாள் பிரியதர்ஷினியின் முதல் மொழிபெயர்ப்பு நூல்.

**திரைப்படம்**

ஆண்டாள் பிரியதர்ஷினி திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதினார். இவரது பாடல்கள் இடம் பெற்ற படங்கள் **ஜாம்பவான்** ஒரு பொண்ணு ஒரு பையன் தீ நகர் தரகு அச்சமுண்டு அச்சமுண்டு உச்சக்கட்டம் யாதுமாகி வல்லமை தாராயோ கொல கொலயா முந்திரிக்கா நெல்லை சந்திப்பு ராமர் குடியரசு ரசிக்கும் சீமானே தொலைக்காட்சி தொடர் பாடல் ’மாதவி’

**சிறந்த புத்தகத்துக்கான விருது**

தமிழக அரசின் கலைமாமணி விருது அரசியல் பாரதி, பெரியார், அண்ணாவின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட ஆண்டாள் பிரியதர்ஷினி திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் செய்தி, மக்கள் தொடர்புப் பிரிவின் மாநில துணைத் தலைவராகப் பொறுப்பு வகிக்கிறார். பல்வேறு அரசியல், இலக்கிய நிகழ்வுகளில், கூட்டங்களில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி வருகிறார். ஊடகங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்ந்த விவாதங்களில் பங்கெடுத்து வருகிறார்.

**விருதுகள்**

தமிழக அரசின் கலைமாமணி விருது பாரத ஸ்டேட் வங்கி இலக்கிய விருது (’பெருமூச்சின் நீளம்' சிறுகதைத் தொகுப்புக்காக) நெய்வேலி புத்தகக் கண்காட்சி விருது (’முத்தங்கள் தீர்ந்துவிட்டன' கவிதைத் தொகுப்புக்காக) திருப்பூர் அரிமா சக்தி விருது (’பெருமூச்சின் நீளம்' சிறுகதைத் தொகுப்புக்காக) லில்லி தேவசிகாமணி விருது (‘தோஷம்’ சிறுகதைக்காக) காசியூர் ரங்கம்மாள் விருது (‘தகனம்’ நாவலுக்காக) பாவலர் முத்துசுவாமி விருது (‘உண்டியல்’ சிறுகதைக்காக) கவிஞர் வைரமுத்து விருது (கவிதைகளுக்காக) KRG நாகப்பன் ராஜம்மாள் விருது (’சுயம் பேசும் கிளி’ கவிதைத் தொகுப்புக்காக) ஆனந்த விகடன் வைர விழா சிறப்புச் சிறுகதை விருது (பல சிறுகதைகளுக்காக) இலக்கியச் சிந்தனை விருது (‘கழிவு’ சிறுகதைக்காக) தமிழக அரசின் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விருது (2011) மத்திய அரசின் பரிசு (சாண அடுப்பும் சூரிய அடுப்பும்) நெல்லை இலக்கிய வட்டம் வழங்கிய ’எழுத்துலகச் சிற்பி’ பட்டம் தேனீ

இலக்கியக் கழகம் வழங்கிய ‘கவிச்செம்மல்’ பட்டம் இலக்கிய இடம் எழுத்தாளர், கட்டுரையாளர், சொற்பொழிவாளர், மொழிபெயர்ப்பாளர், திரைப்படப் பாடலாசிரியர் எனப் பன்முகம் கொண்ட படைப்பாளி ஆண்டாள் பிரியதர்ஷினி. பொது வாசிப்புக்குரிய பல படைப்புகளைத் தந்துள்ளார். தனது கவிதைகளில் வெளிப்படும் சமூக மற்றும் பெண்ணியச் சிந்தனைகளால், புரட்சிகரமான கருத்துக்களால் கவிஞராகவே அடையாளம் பெற்றுள்ளார். பெண்ணியக் கருத்துக்களைத் தன் எழுத்திலும் மேடையிலும் முன் வைத்து வருகிறார்.

**ஆண்டாள் பிரியதர்ஷினி புத்தகங்கள்**

நூல்கள் கவிதைத் தொகுப்பு சுயம் பேசும் கிளி மன்மத எந்திரம் காதல் நாற்பது நான் வல்லினம் எனக்கும் கடவுளுக்கும் ஊடல் நானும் இன்னொரு நானும் என் காதலன் என் காதலி முத்தங்கள் தீர்ந்துவிட்டன தோகையெல்லாம் துப்பாக்கிகள் (மரபுக் கவிதை) சூரியனை விடிய வைப்போம் (புதுக் கவிதைப் புதினம்) சிறுகதைத் தொகுப்பு தேசம் மிச்சமிருக்கட்டும் கடைசிக் கடிதம் தோஷம் தலைமுறை தாகம் சுருதி பிசகாத வீணை ரிஷியும் மனுஷியும் வானவில் வாழ்க்கை சரஸ்வதியின் சிலுவை பெருமூச்சின் நீளம் ஆண்டாள் பிரியதர்ஷினி

**சிறுகதைகள் (முழுத் தொகுப்பு)**

நாவல் தகனம் கனவுகள் கைப்பிடிக்குள் முதல் ஒளிபரப்பு ஆரம்பம் தாளம் தப்பிய தாலாட்டு குறுநாவல் சாருலதா கதாநாயகிவேடிக்கை மனிதர்கள் வலி சிகரம் சிலந்திகளுக்கும் எட்டும் கட்டுரை நூல் பெண் எழுத்து விடிவைத்தேடி மொழிபெயர்ப்பு சத்திய சோதனை – மகாத்மா காந்தி தொகுப்பு நூல் பெண் வாசனை (பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு) புதிய திருப்பாவை ஆன்மிகம் ஷீரடி பாபா அருளுரை புதிய படைப்புகள் 45 டிகிரி குனியும் மனிதர்கள் மாயனே மாயனே பனிக்குடம் உடையும் நேரம் கலப்பை சுற்றும் நூலாம்படை வல்லினம் 2.0 உசாத்துணை ஆண்டாள் பிரியதர்ஷினி நேர்காணல்: நக்கீரன் இதழ் எழுத்தாளர்: ஆண்டாள் பிரியதர்ஷினி: தென்றல் இதழ் கட்டுரை ஆண்டாள் பிரியதர்ஷினி இணையதளம் செய்திப்புனல் கட்டுரை ஆண்டாள் பிரியதர்ஷினி நாவல்களின் பெண்ணியம்.

**சல்மா**

ராஜாத்தி சல்மா (இயற்பெயர் ருக்கையா பேகம்)(பிறப்பு: டிசம்பர் 19,1967) தமிழ்க் கவிஞர் , நாவலாசிரியர், அரசியல்வாதி. பெண்களின் அக உலகையும், தனக்குள்ளேயே வசிக்க நேர்ந்துவிட்ட தனிமையயும் பாடுபொருளாகக் கொண்டவை சல்மாவின் கவிதைகள். இஸ்லாமிய சமூகத்துப் பெண்களின் அக உலகைச் சித்தரித்த அவரது இரண்டாம் சாமங்களின் கதை யின் ஆங்கில மொழியாக்கம் ஆசியப் படைப்புகளுக்கான புக்கர் விருதின் தேர்வுப்பட்டியலில் இடம் பெற்ற முதல் தமிழ்ப் படைப்பு. அரசியல் தளத்தில் பேரூராட்சித் தலைவியாகயும் தமிழ்நாடு சமூகநல வாரியத் தலைவியாகவும் தி.மு.க.வில் மகளிர்அணி பிரச்சாரக்குழு செயலாளராகவும் செயல்பட்டார்.

1 பிறப்பு,கல்வி
2 தனி வாழ்க்கை
3 இலக்கியப் பணிகள்
4 அரசியல் பணிகள்
5 இலக்கிய இடம்
6 படைப்புகள்
6.1 கவிதைத் தொகுப்புகள்
6.2 நாவல்கள்
6.3 சிறுகதை தொகுப்புகள்
6.4 அபுனைவு
7 பரிசுகள், விருதுகள்
7.1 ஆவணப்படம்
8 உசாத்துணை
9 இணைப்புகள்
10 அடிக்குறிப்புகள்

**பிறப்பு,கல்வி**

ராஜாத்தி சல்மா டிசம்பர் 19,1967 அன்று திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் சம்சுதீன், சர்புன்னிசா இணையரின் மகளாகப் பிறந்தார். துவரங்குறிச்சியில் 13 வயது வரை பள்ளிக்குச்

சென்றார். சிறு வயதில் குரான் ஓதுவதற்கான போட்டிகளில் பரிசுகள் பெற்றார். அடுத்த வீட்டில் வசித்த பெரியப்பாவின் மகன் அப்துல் ஹமீது(கவிஞர் மனுஷ்யபுத்ரன்) சல்மா வெளியுலகைப் பார்ப்பதற்கான ஜன்னலாக இருந்தார். அவர் மூலம் பத்திரிகைகள், புத்தகங்கள் படிக்கக் கிடைத்தன.ராணி", "அரசி" போன்ற பத்திரிகைகளுக்கு துணுக்குகள் எழுதி, அவை பிரசுரமாகின. அப்துல் ஹமீதைப் பார்க்க வருபவர்கள் கொண்டு வரும் புத்தகங்களும், தகவல்களும் சல்மாவின் வாசிப்பைப் பரவலாக்கின. தமிழின் முக்கியப் படைப்புகள், பெரியாரின் நூல்கள் மற்றும் ரஷ்ய இலக்கியங்களின் அறிமுகம் கிடத்தது. எழுதுவதற்கான ஆர்வம் தோன்றியது. சல்மா கவிதைகள் எழுதத் துவங்கினார். அப்துல்ஹமீது மூலமோ அல்லது தன் பெற்றோர் மூலமோ தன் கவிதைகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பினார். பல கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன.

**தனி வாழ்க்கை**

அவரது பதினேழாம் வயதில் அப்துல் மாலிக்குடன் திருமணம் நடந்தது. சலீம்ஜாஃபர், முஹம்மது நதீம் என இரண்டு மகன்கள். ஒரு பெண் எழுதுவதை நினைத்துக்கூட பார்க்க முடியாத சூழலில் கணவருக்கோ, வீட்டில் உள்ளவர்களுக்கோ தெரியாமல் அப்துல் ஹமீது மூலமோ அல்லது தன் பெற்றோர் மூலமோ தன் கவிதைகளைப்பத்திரிகைகளுக்கு அனுப்பினார். சல்மா என்ற புனைபெயரில் எழுதினார். பல கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. எழுதுவதன் மூலமே தனக்கான அடையாளத்தைத் தக்க வைக்க முடியும் என நம்பினார். 1995-ல் சுந்தர ராமசாமியைச் சந்தித்த பின், அவரிடம் கடிதத் தொடர்பில் இருந்தார்.

**இலக்கியப் பணிகள்**

மனுஷ்ய புத்திரனினின் முயற்சியால் ஒரு மாலையும் இன்னொரு மாலையும் என்ற தொகுப்பு 2000-ம் ஆண்டு காலச்சுவடு பதிப்பகமாக வெளிவந்தது. கவிதையின் பாடுபொருள் பெரும்பாலும் 'தனக்குள்ளேயே வசிக்க நேர்ந்து விட்ட நீண்ட தனிமை'. இத்தொகுப்பிலுள்ள 59 கவிதைகளில் 17 தலைப்பில்லாதவைநவம்பர் 2003-ல் இரண்டாம் ஜாமங்களின் கதை நாவலை எழுதினார். சுந்தர

ராமசாமி, லல்லி, காலச்சுவடு கண்ணன் ஆகியோர் தந்த உற்சாகத்தினாலும், அக்கறையான நினைவுறுத்தல்களாலுமே இந்தநாவலை எழுதியதாகக் குறிப்பிடுகிறார். இஸ்லாமியச் சமூகப் பெண்களின் அகவுலகை ஒரு பெண்ணின் பார்வையிலிருந்தே எழுதிய படைப்பு . திருமண உறவின் மூலம் ஏற்படுத்தப்படும் இறுக்கம், உடலியல் சார்ந்த துன்பங்கள், மறுக்கப்படும் காமம், அவளைச் சுற்றி நிகழும் சுரண்டல்கள் பெண்களால் பெண்களுக்கு இழைக்கப்படும் துன்பங்கள் போன்ற பேசாப் பொருள்களைப் பேசுகிறது. சமூகத்துக்காகப் பூசிக் கொண்ட பூச்சுகளையெல்லாம் கழுவித் துடைத்துவிட்ட பின், அடிப்படையாக ஒரு மனித உயிராக மட்டும் இருக்கும் இரண்டாம் ஜாமத்தில்தான் உண்மைப் பெண்களின் கதை எழுதப் படுகிறது என்பதே நாவலின் பெயர்க்காரணம். இரண்டாம் ஜாமங்களின் கதை ஆங்கிலம், மராத்தி, ஜெர்மன் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சல்மாவின் இரண்டாம் கவிதைத் தொகுப்பான பச்சை தேவதை 2003-ல் வெளிவந்தது. பெண்கள் மட்டுமே உணர்ந்து எழுதக்கூடிய பல்வேறு விதமான படிமங்கள், காட்சிப்படலங்கள் இத்தொகுப்பிலுள்ள பல கவிதைகளில் காணக் கிடைக்கின்றன. சல்மாவின் சிறுகதைத் தொகுப்பு சாபம் '2008-ல் வெளியானது. இரண்டாவது நாவல் மானாமியங்கள் 2013ல் வெளியானது.2006-ல் ஆண்டு ஃப்ராங்க்பர்ட் புத்தக விழா, 2009-ல் லண்டன் புத்தகக் கண்காட்சி, 2010-ல் பெய்ஜிங் புத்தகக் கண்காட்சி ஆகியவற்றில் பங்கேற்றார். 2007-ல் சல்மாவின் படைப்புகளை முன்வைத்து சிகாகோ பல்கலைக்கழகத்தில் நார்மன் கட்லர் நினைவுக் கருத்தரங்கு நடைபெற்றது.மே 2007-ல் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின்(FETNA) தமிழ்விழா, உலகத்தமிழாராய்ச்சி மாநாடு, சிக்காகோ தமிழ்ச்சங்கப் பொன்விழா ஆகியவற்றை உள்ளடக்கிய முப்பெரும் விழாவில் சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்பட்டார்.

**அரசியல் பணிகள்**

பொன்னாம்பட்டி துவரங்குறிச்சி பேரூராட்சி பெண்களுக்கான தொகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது. சல்மா வேட்பாளராக நிறுத்தப்பட்டு, தேர்தலில் வென்றார். 2002-ல் இலங்கையில் நடந்த சர்வதேசப் பெண்ணுரிமை மாநாட்டில் பங்குகொள்ள அழைக்கப்பட்டார். 2004-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். 2006-ல் மருங்காபுரி தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு

வெற்றிவாய்ப்பை இழந்தார். பின்னர் தமிழ்நாடு சமூகநல வாரிய தலைவியாக, கவிஞர் சல்மா நியமனம் செய்யப்பட்டார். சமூகநல வாரியத்தில் பல நலத்திட்டங்களை முன்னெடுத்தார். திருச்சி நகரில் பிச்சை எழுப்பவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டத்தை தொண்டு நிறுவனங்கள் மூலம் ஒருங்கிணைத்தார். கிராமத் தத்தெடுப்புத் திட்டம் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் கிராமத்தில் பெண் முன்னேற்றம், அனைவருக்குமான கல்வி, போன்ற திட்டங்கள் முன்னெடுத்தார். திருச்சி மாவட்டத்தில் திருநங்கையருக்கான ஆலோசனை மையங்கள், ஆதரவற்ற பெண்களுக்கான கணினி மையங்கள்,மாணவர்களுக்கான ஆலோசனை மையங்களை அவரது தலைமையில் சமூகநல வாரியம்ஏற்படுத்தியது.

**இலக்கிய இடம்**

நவீனத் தமிழில் பெண்ணெழுத்து தீவிரம் பெற்ற கட்டத்தில் முதன்மையாக வெளிப்பட்டவற்றில் ஒன்று சல்மாவின் கவிதை மொழி. தன்னை உணர்ந்த தன் இருப்பை அறிந்து தனது விடுதலையை விழையும் பெண் நிலையைச் சொன்னவை சல்மாவின் கவிதைகள். சமூகக் கட்டமைப்பின் ஒடுக்குமுறை தரும் வலியும் வேதனையும், உடலும் உடலின் உபாதைகளும் வேட்கைகளும் கசியும் மொழியில் சல்மாவின் கவிதைகள் அமைந்திருக்கின்றன. அவரது ஆரம்ப காலக் கவிதைகளில் ஒரு இயலாமை, மீற முடியாமை என பெண் உலகத்துக்கான சலிப்புகள் தெரிந்தன. பல கவிதைகளிலும் கொடுந்தனிமையும், நிராகரிப்பின் வலிகளும், புறக்கணிப்பின் துயரங்களும் இழையோடுகின்றன."சமூகம், அரசியல் மற்றும் இலக்கிய வரலாற்றுக் குறிப்புகள் உடையவை, இல்லாதவை என நவீன கவிதைகளைப் பிரித்தால் இரண்டாம் வகையில் சல்மா வின் கவிதைகள் அடங்கும். துணிச்சலும், நளினமும் சல்மாவின் கவிதைகளில் தெரிகின்றன. கவனிப்பைத் தக்கவைக்கும் கவிஞர் சல்மா" என்று ஞானக்கூத்தன் குறிப்பிடுகிறார். மூடுண்ட இஸ்லாமிய சமூகத்தின் பெண்களின் உலகைச் சித்தரித்த வகைமையில் இரண்டாம் ஜாமங்களின் கதை முக்கியமான படைப்பு. பெண்களின் அக உலகை, துன்பங்களைச் சொல்வதோடு நிறுத்திவிடும் நாவல் அதற்கான தீர்வு நோக்கி நகரவில்லை. பெண்ணியக் கூறுகளுடனான வாசிப்பு சார்ந்த உளவியல் ரீதியில், இது ஒரு

வரலாற்று நடப்பியல் தன்மை கொண்ட, காலதேச வர்த்தமானங்களை வரையறுத்துக் கொள்ளாத, ஆனாலும், தீர்வு நோக்கி நகராத பிரதியாக உள்ளது. ஆசியன் புக்கர் விருதுக்கான தெரிவுப் பட்டியலில் இரண்டாம் ஜாமங்களின் கதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு இடம்பெற்றது. இப்பட்டில்யலில் இடம்பெற்ற முதல் தமிழ்ப்படைப்பும் இதுவே.

மார்க்கம் பெண்களுக்கு அளித்துள்ள சுதந்திரத்தை அணுக சமூகம் அனுமதிப்பதில்லை என்ற கருத்தை சல்மா வலியுறுத்தி வருகிறார். மார்க்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் சமூகத்தின் நடைமுறைகளுக்குமிடையில் அகன்று செல்லும் இடைவெளி பற்றியும் அதற்குள்ளே புழுங்கியும் நசுங்கியும் கொண்டிருக்கும் பெண்ணுலகம் பற்றியுமான ஒரு துக்கம் நிரம்பிய பதிவு சல்மாவின் மனாமியங்கள் சல்மாவின் முன்னே கட்டியெழுப்பப் பட்டிருந்த தடைகளும், அதனால் அவர் எதிர் நோக்கிய பிரச்சனைகளும், அதையும் தாண்டி அவர் வெளியுலகுக்கு வந்த விதங்களும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்குப் பெரிய தொரு தன்னம்பிகையை அளித்தன.

**படைப்புகள் கவிதைத் தொகுப்புகள்**

ஒரு மாலையும் இன்னொரு மாலையும் பச்சை தேவதை தானுமானவள் நாவல்கள் இரண்டாம் ஜாமங்களின் கதை மனாமியங்கள் அடைக்கும் தாழ் சிறுகதை தொகுப்புகள் சாபம் பால்யம் அபுனைவுகனவு வெளிப் பயணம் பரிசுகள், விருதுகள் சோனாலி நவாங்குலால் மராத்தியில் மொழியாக்கம் செய்யப்பட 'இரண்டாம் ஜாமங்களின் கதை' நாவலுக்கு மொழியாக்கத்திற்கான சாகித்ய அகாதமி பரிசு கிடைத்தது.

**ஆவணப்படம்**

2013-ல் வெளிவந்த 'சல்மா' என்ற ஆவண நிகழ்படம் கவிஞர் சல்மாவினது தன்வரலாற்றையும் அவர் சந்தித்த ஒடுக்குமுறைகளின் பின்னால் உள்ள சமூக, சமய, பண்பாட்டு, அரசியல் சிக்கல்களையும் பற்றியது . இப் படத்தை கிம் லோங்னோரோ (Kim Longinotto) இயக்கினார். இப் படம் 2009-ல் சண்டான்ஸ்(Sundance) திரைப்பட விழாவில் முதலில் திரையிடப்பட்டு, பின்னர் பல நாட்டு விழாக்களிலும் நிகழ்வுகளிலும் திரையிடப்பட்டது.

**உசாத்துணை**

முத்தமிழ் வளர்த்த முஸ்லீம்கள் -சல்மா நேர்காணல் பெ. அய்யனார் சல்மாவின் கவிதைகளில் பெண் மொழியும் பெண் இருப்பும் பூ.மூ.அன்புசிவா ஒரு மாலையும் இன்னொரு மாலையும் முன்னுரையும் கவிதைகளும்-திண்ணை சல்மா கவிதைகள் ஒரு மாலையும் இன்னொரு மாலையும் தொகுப்பை முன்வைத்து-கீற்று சல்மாவின் பச்சை தேவதை குறித்து-டிசே தமிழன் சல்மா-நேர்காணல் தென்றல் இதழ்-உரையாடியவர் மனுபாரதி ஆவணம்-எழுத்தால் கிடைத்த சுதந்திரம்-தமிழ்ஹிந்து இரண்டாம் ஜாமங்களின் கதையை முன்வைத்து-ரெங்கநாயகி-கீற்று இதழ் இணைப்புகள் சல்மா நேர்காணல் ,தென்றல்இதழ் (ஜூலை,2007) ,உரையாடல்-மனுபாரதி

**அடிக்குறிப்புகள்**

சல்மாவின் எதிர்ப்படும் நண்பரின் முகம் பார்த்துப் புன்னகைக்கும் அளவிற்கேனும் சந்தோஷ மனநிலை வாய்த்தால் போதுமென்றிருக்கும் வாழ்க்கை. -- சண்டையிட்டுக் கொண்ட இரவொன்றில் உன் மேல் பட்ட விரல்கள் அந்நியன் மேல்பட்ட உணர்வோடு உள்ளிழுத்துக் கொண்ட நினைவு உன்னோடு சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் இந்த கணத்தில் பின்னிருந்து கண் பொத்தி விளையாடுகிறது. -- கீழே விழுந்து அரற்றிக் கொண்டிருக்கும் வெயில் -- தன்னை அணைத்துக்கொள்ளும் கிளைகள் இல்லா வெட்டப்பட்ட மரத்தின் கீழ். -- எதைப் பற்றியும் எழுதுகிறாய் என்னைப் பற்றி எழுதினேன் தினம் தினம் கெஞ்சுவாய். மழையில் நனைவது சுகமா? மழைப் பற்றி எழுதுவது சுகமா? -- யுத்தம் பற்றி எனக்குத் தெரிந்திருக்க நியாமில்லைதான். ஆண்டுகளின் புள்ளி விவரங்களாக்கப்பட்டு பாட புத்தகங்களில் யுத்தங்கள் வந்த பிறகே பிறந்துள்ளேன். விமானம் பறப்பதை அருகில் பார்க்கவே 25 வருடங்கள் பிடித்த எனக்கு வெடிகுண்டு வீசும் விமானங்கள் பற்றி கற்பனை செய்ய முடியவில்லை. எட்டுக்கு எட்டடி இருட்டறையில் வாழ்ந்து பழகியுள்ள என்னால் ஓரளவுக்கு பதுங்கு குழிகளின் அனுபவம் உணர முடிகிறது. துண்டு ஒன்றை கட்டிக்கொண்டு அம்மாவாக முடிகிறது குழந்தைகளால். -- குழந்தையாக முடியாமல்

**"விருதுகள்**

தொகு சிற்பி அறக்கட்டளை விருது[சான்று தேவை] கவிஞர் தேவமகள் அறக்கட்டளை விருது[சான்று தேவை] தமிழ்நாடு

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வழங்கும் செல்வன் கார்க்கி விருதுஏலாதி அறக்கட்டளை விருது கவிஞர் வைரமுத்து வழங்கும் 'கவிஞர் தின விருது' திருப்பூர் மத்திய அரிமா சங்கம் வழங்கும் சக்தி – 2005 விருது [சான்று தேவை] சென்னை புத்தகக் கண்காட்சி – 2005 ஆம் ஆண்டில் இயக்குநர் பார்த்திபன் வழங்கிய சிறந்த படைப்பாளி விருது நெய்வேலி புத்தகக் கண்காட்சி 2005 இல் வழங்கிய சிறந்த எழுத்தாளர் விருது.தமிழக அரசின் சிறந்த கவிதை நூலுக்கான விருது - 2008 செயந்தன் நினைவு கவிதை விருது' - 2010 தமிழக ஆளுநர் வழங்கியது பிருந்தாவும் இளம் பருவத்து ஆண்களும் சிறுகதைத் தொகுப்பிற்காக: தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்க 'புதுமைப்பித்தன் நினைவு விருது - 2013' கங்காபுரம் நாவலுக்காக: கோவை கத்தூரி சீனிவாசன் அறக்கட்டளையின் 'ரங்கம்மாள் நினைவு விருது , சமயபுரம் எசு.ஆர்.வி. பள்ளியின் 'படைப்பூக்கத் தமிழ் விருது, அவள் விகடனின் 'இலக்கிய விருது 2021 ஆம் ஆண்டிற்கான புதுமைப் பித்தன் படைப்பிலக்கிய "

**"படைப்பு நூல்கள்**

தொகு கவிதை தொகு என் மனசை உன் தூரிகை தொட்டு – 1998 நீரில் அலையும் முகம் – 2000 ஆதியில் சொற்கள் இருந்தன – 2002 இசைக் குறிப்புகள் நிறையும் மைதானம் – 2005 கனவைப் போலொரு மரணம் – 2007 இரவு வரைந்த ஓவியம் – 2010 துரோகத்தின் நிழல் – 2012 எரியத் துவங்கும் கடல் – 2014 கடிதம் தொகு

1. கனவிருந்த கூடு – 2000

கட்டுரை பெண் எழுதும் காலம் – 2007 ததும்பி வழியும் மௌனம் – 2014 கம்பலை முதல் – 2015 தேர்தலின் அரசியல்- 2016 அறுபடும் யாழின் நரம்புகள் – 2017 எங்கிருந்து தொடங்குவது - 2017 மரணம் ஒரு கலை – 2018

**சிறுகதை**

பட்டுப்பூச்சிகளைத் தொலைத்த ஒரு பொழுதில் – 2005 பிருந்தாவும் இளம் பருவத்து ஆண்களும் – 2013 இந்திர நீலம் – 2020

**ஆய்வு**

**தேவரடியார்** : கலையே வாழ்வாக – 2018

**நாவல்**

கங்காபுரம்–2018   சாலாம்புரி-2020

## தொகுத்த  நூல்கள்

தொகு வந்தவாசிப் போர் - 250 - 2010 (டாக்டர் மு.ராஜேந்திரன் இ.ஆ.ப அவர்களுடன் இணைந்து) நிகழ் முகம் – 2010 மீதமிருக்கும் சொற்கள் – 2015 காலத்தின் திரைச்சீலை ட்ராட்ஸ்கி மருது – 2015 கனவும் விடியும் 2018 செம்பதிப்பு தொகு இந்திய சரித்திரக் களஞ்சியம், 8 தொகுதிகள் – 2011 ஆனந்தரங்கப் பிள்ளை தினப்படி சேதிக் குறிப்பு, 12 தொகுதி – 2019 (டாக்டர் மு.ராஜேந்திரன் இ.ஆ.ப அவர்களுடன் "

**"திரைப்பட அனுபவம்**

சகுந்தலாவின் காதலன் என்ற திரைப்படத்தில் வசனகர்த்தாகவும் துணை இயக்குனராகவும் வெண்ணிலா பணியாற்றியுள்ளார். இரண்டு திரைப்படங்களில் பாடல்களும் எழுதியுள்ளார்"

**"இலக்கியச் செயல்பாடுகள்**

கரிசல் இலக்கியவாதி கி.ராவின் கதை சொல்லி மற்றும் புத்தகம் பேசுது இதழ்களின் ஆசிரியர் குழுவில் ஒருவராக வெண்ணிலா செயல்பட்டுள்ளார். சாகித்ய அகாதமிக்காக தமிழ்நாடு, இலங்கை, ஆத்திரேலியா, கனடா, பிரான்சு நாடுகளில் வாழும் தமிழ்ப்பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுக்கும் பணியில் ஈடுபட்டார்.[சான்று தேவை] 2002-ஆம் ஆண்டு ஐதராபாத்தில் நடைபெற்ற பன்னாட்டு பெண் எழுத்தாளர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாகப் பங்கேற்றார். 2011, சனவரியில் புது தில்லியில் நடைபெற்ற காமன்வெல்த் எழுத்தாளர்களுக்கான மாநாட்டில் தமிழகப் பிரதிநிதியாக கலந்து கொண்டார். ஒரிசாவில் நடைபெற்ற சார்க் இளம் கவிஞர்கள் மாநாடு, அசாம் மற்றும் மிசோரம் மாநிலங்களில் நடந்த பன்மொழிக் கவிஞர்கள் சந்திப்பு போன்ற நிகழ்ச்சிகளிலும் தமிழகத்தின் பிரதிநிதியாக வெண்ணிலா பங்கேற்றுள்ளார்.

**"எழுத்துலக அறிமுகம்**

சிறு வயதில் இருந்தே புத்தகங்கள் வாசிக்கத் தொடங்கிய வெண்ணிலா தன்னுடைய 27 வது வயதில் எழுதத் தொடங்கினார். ஏழு கவிதை நூல்கள், ஒரு கடித இலக்கிய நூல், ஏழு கட்டுரைத் தொகுப்புகள், மூன்று சிறுகதைத் தொகுப்புகள், இரண்டு நாவல்கள், ஓர் ஆய்வு நூல் பதிப்பாசிரியராக இரண்டு நூல்கள், ஐந்து தொகுப்பு நூல்கள் என வெண்ணிலாவின் இலக்கியப் படைப்புகள் அணிவகுத்து நிற்கின்றன.குழந்தைகள், கைவிடப்பட்ட முதியோர்கள், நவீன வாழ்வியல், உணவு முறைகள், பெண்கள் சந்திக்கும் இன்னல்கள்[6] போன்ற சமகாலச் சிக்கல்கள் குறித்த சிந்தனைகள் இவரது அனைத்து வகை இலக்கியங்களிலும் இடம்பெறுகின்றன. வரலாற்றை மறுவாசிப்பிற்குத் தூண்டும் படைப்புகளையும் கட்டுரைகளையும் எழுதி பதிப்பித்துள்ளார். வெண்ணிலாவின் படைப்புகளை இதுவரை 20 மாணவர்களுக்கும் மேற்பட்டோர் இளம் முனைவர் ஆய்வும், முனைவர் பட்ட ஆய்வும் வெண்ணிலா இந்தியத்தமிழக எழுத்தாளர்

அ. வெண்ணிலா ( பிறப்பு: 10 ஆகத்து 1971) தமிழக எழுத்தாளரும், கவிஞரும் ஆவார். கவிஞர், சிறுகதை ஆசிரியர், கட்டுரையாளர், நாவலாசிரியர், ஆசிரியர், சிறு பத்திரிகை ஆசிரியர் என பன்முக ஈடுபாடுகளுடன் தமிழ் உலகில் இயங்கிவருகிறார். பெண்ணியம் சார்ந்த கருத்துகளை முன்னெடுத்து இலக்கியம் படைத்து வருவது வெண்ணிலாவின் தனித்துவமாகும். அன்றாட வாழ்வின் இன்னல்களை புனைவுகள் ஏதுமின்றி படைப்பாக்குவது இவரது ஆற்றலாகும். இவர் எழுதிய படைப்புகள் ஆங்கிலம், மலையாளம், இந்தி என பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி அளவிலான பாடத்திட்டங்களில் பாடமாகவும் இடம்பெற்றுள்ளன. 2009-2010 ஆம் ஆண்டு காலத்தில் தமிழகத்தின் சமச்சீர் கல்வி பாடத்திட்டக் குழுவில் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி புதிய பாடப்புத்தக உருவாக்கத்தில் பங்களிப்பு வழங்கியுள்ளார்.

**அ. வெண்ணிலா**

பிறப்பு ஆகத்து 10, 1971 (அகவை 53)வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் தேசியம் இந்தியர் சமயம் இந்து வாழ்க்கைத் துணை மு. முருகேஷ் பிள்ளைகள் கவின்மொழி, நிலாபாரதி, அன்புபாரதி விருதுகள் தமிழக அரசின் சிறந்த கவிதை நூலுக்கான விருது, புதுமைப்பித்தன் நினைவு விருது உட்பட பல அறக்கட்டளை விருதுகள். சென்னையில் ஆண்டுதோறும் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் (பபாசி) சார்பில் புத்தகக் காட்சி, நடைபெறுவது வழக்கம். 2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள புத்தக கண்காட்சியில் அ. வெண்ணிலா உட்பட ஆறு ஆளுமைகளுக்கு கலைஞர் பொறிகிழி விருது வழங்கப்பட்டது.

**வாழ்க்கைக் குறிப்பு"**

**நூல்கள்**

கவிதைத் தொகுப்பு சுயம் பேசும் கிளி மன்மத எந்திரம் காதல் நாற்பது நான் வல்லினம் எனக்கும் கடவுளுக்கும் ஊடல் நானும் இன்னொரு நானும் என் காதலன் என் காதலி முத்தங்கள் தீர்ந்துவிட்டன தோகையெல்லாம் துப்பாக்கிகள் (மரபுக் கவிதை) சூரியனை விடிய வைப்போம் (புதுக் கவிதைப் புதினம்) சிறுகதைத் தொகுப்பு தேசம் மிச்சமிருக்கட்டும் கடைசிக் கடிதம் தோஷம் தலைமுறை தாகம் சுருதி பிசகாத வீணை ரிஷியும் மனுஷியும் வானவில் வாழ்க்கை சரஸ்வதியின் சிலுவை பெருமூச்சின் நீளம் ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள் (முழுத் தொகுப்பு) நாவல் தகனம் கனவுகள் கைப்பிடிக்குள் முதல் ஒளிபரப்பு ஆரம்பம் தாளம் தப்பிய தாலாட்டு குறுநாவல் சாருலதா கதாநாயகி வேடிக்கை மனிதர்கள் வலி சிகரம் சிலந்திகளுக்கும் எட்டும் கட்டுரை நூல் பெண் எழுத்து விடிவைத்தேடி மொழிபெயர்ப்பு சத்திய சோதனை – மகாத்மா காந்தி தொகுப்பு நூல் பெண் வாசனை (பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு) புதிய திருப்பாவை ஆன்மிகம் ஷீரடி பாபா அருளுரை புதிய படைப்புகள் 45 டிகிரி குனியும் மனிதர்கள் மாயனே மாயனே பனிக்குடம் உடையும் நேரம் கலப்பை சுற்றும் நூலாம்படை வல்லினம் 2.0 உசாத்துணைஆண்டாள் பிரியதர்ஷினி நேர்காணல்: நக்கீரன் இதழ் எழுத்தாளர்: ஆண்டாள் பிரியதர்ஷினி: தென்றல் இதழ் கட்டுரை ஆண்டாள் பிரியதர்ஷினி இணையதளம் செய்திப்புனல் கட்டுரை

ஆண்டாள் பிரியதர்ஷினி நாவல்களின் பெண்ணிய"பாரதி, பெரியார், அண்ணாவின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட ஆண்டாள் பிரியதர்ஷினி திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் செய்தி, மக்கள் தொடர்புப் பிரிவின் மாநில துணைத் தலைவராகப் பொறுப்பு வகிக்கிறார். பல்வேறு அரசியல், இலக்கிய நிகழ்வுகளில், கூட்டங்களில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி வருகிறார். ஊடகங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்ந்த விவாதங்களில் பங்கெடுத்து வருகிறார்.

**விருதுகள்**

தமிழக அரசின் கலைமாமணி விருது பாரத ஸ்டேட் வங்கி இலக்கிய விருது ('பெருமூச்சின் நீளம்' சிறுகதைத் தொகுப்புக்காக) நெய்வேலி புத்தகக் கண்காட்சி விருது ('முத்தங்கள் தீர்ந்துவிட்டன' கவிதைத் தொகுப்புக்காக) திருப்பூர் அரிமா சக்தி விருது ('பெருமூச்சின் நீளம்' சிறுகதைத் தொகுப்புக்காக) லில்லி தேவசிகாமணி விருது ('தோஷம்' சிறுகதைக்காக) காசியூர் ரங்கம்மாள் விருது ('தகனம்' நாவலுக்காக) பாவலர் முத்துசுவாமி விருது ('உண்டியல்' சிறுகதைக்காக) கவிஞர் வைரமுத்து விருது (கவிதைகளுக்காக) KRG நாகப்பன் ராஜம்மாள் விருது ('சுயம் பேசும் கிளி' கவிதைத் தொகுப்புக்காக) ஆனந்த விகடன் வைர விழா சிறப்புச் சிறுகதை விருது (பல சிறுகதைகளுக்காக) இலக்கியச் சிந்தனை விருது ('கழிவு' சிறுகதைக்காக) தமிழக அரசின் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விருது (2011) மத்திய அரசின் பரிசு (சாண அடுப்பும் சூரிய அடுப்பும்) நெல்லை இலக்கிய வட்டம் வழங்கி 'எழுத்துலகச் சிற்பி' பட்டம் தேனீ இலக்கியக் கழகம் வழங்கிய 'கவிச்செம்மல்' பட்டம் இலக்கிய இடம் எழுத்தாளர், கட்டுரையாளர், சொற்பொழிவாளர், மொழிபெயர்ப்பாளர், திரைப்படப் பாடலாசிரியர் எனப் பன்முகம் கொண்ட படைப்பாளி ஆண்டாள் பிரியதர்ஷினி. பொது வாசிப்புக்குரிய பல படைப்புகளைத் தந்துள்ளார். தனது கவிதைகளில் வெளிப்படும் சமூக மற்றும் பெண்ணியச் சிந்தனைகளால், புரட்சிகரமான கருத்துக்களால் கவிஞராகவே அடையாளம் பெற்றுள்ளார். பெண்ணியக் கருத்துக்களைத் தன் எழுத்திலும் மேடையிலும் முன் வைத்து வருகிறார்." "ஆண்டாள் பிரியதர்ஷினியின் தந்தை, தாய் இருவருமே

எழுத்தாளர்கள், கவிஞர்கள். அவர்கள் வழியில் ஆண்டாள் பிரியதர்ஷினியும் கவிதைகள் எழுதினார். சுஜாதா இவரது கவிதைகளை கணையாழியின் கடைசி பக்கங்கள் மூலம் கவனப்படுத்தினார். “காலத்திற்கு ஏற்றாற் போல் கவிதை தன்னை மாற்றிக் கொண்டு வருகிறது. ஆண்டாள் பிரியதர்ஷினி இன்னும் பல உயரங்களைத் தொடுவார்” என்று குறிப்பிட்டுப் பாராட்டினார். முன்னணி இதழ்களில் ஆண்டாள் பிரியதர்ஷினியின் கவிதைகள் வெளியாகி வாசக கவனம் பெற்றன. தொடர்ந்து சிறுகதைகளையும், கட்டுரைகள், நாவல்களையும் எழுதினார். தினமலர், ஆனந்த விகடன், குங்குமம், கலைமகள் போன்ற இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகின. இவரது சில சிறுகதைகள் நாடகமாகவும் மேடை ஏறின. இவரது முதல் சிறுகதைத் தொகுப்பு ‘சுருதி பிசகாத வீணை’ இவர் கல்லூரி படிக்கும்போது வெளியானது.ஆண்டாள் பிரியதர்ஷினி, குறும்படங்களைத் தயாரித்தார். ‘செம்மொழி மாநாட்டுக் கவியரங்கம்' உள்பட பல கவியரங்குகளில் கலந்துகொண்டு கவிதை வாசித்தார். இவரது 'தகனம்', ‘வானவில் வாழ்க்கை’, ‘கதாநாயகி' பள்ளி மற்றும் கல்லூரிகளில் பாட நூலாக இடம் பெற்றன. பல மாணவர்கள் இவரது படைப்புகளை ஆராய்ந்து இளமுனைவர், முனைவர் பட்டம் பெற்றனர்.சாகித்ய அகாதெமி வெளியிட்டுள்ள பெண் படைப்பாளர் படைப்புகள் நூலில் இவரது சிறுகதை இடம் பெற்றது. பெண் கவிஞர்களின் தொகுப்பு நூலான ‘பறத்தல் அதன் சுதந்திரம்’ கவிதைத் தொகுப்பு நூலில் இவரது கவிதை இடம்பெற்றது.

**Additional Resources:**

Smart board

WebSide

www.sangathamizh.com

**Practice Questions:**

1.பெண்ணிய வகைகள் குறித்து எழுதுக

2. ஆண்டாள் பிரியதர்ஷினி குறித்து விவரி

3. அ. வெண்ணிலா வாழ்க்கைக் குறித்து எழுதுக

4. அ. வெண்ணிலா கவிதைத் தொகுப்புகள் பற்றி கட்டுரை வரைக

5. இக்காலபெண் எழுத்தாளர்களை பற்றி கட்டுரை வரைக

**References:**

1.இர. பிரேமா பெண்ணிய சிந்தனைகள்

2. அரங்க மல்லிகா. பெண்ணியக் கோட்பாடுகள்

3. நவீன பெண் கவிஞர்கள் கவிதைகளில் தொகுப்பு (கௌரா வெளியீடு)